

ஈரோடு தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பில் மொழிப்போர்த் தியாகிகளின் வீரவணக்க நாள் அமைச்சரின் முகாம் அலுவலகத்திலும், அதனை தொடர்ந்து ஈரோடு தெற்கு மாவட்ட கழக அலுவலகத்திலும் மொழிப் போர்த் தியாகிகளின் திருவுருவப் படங்களுக்கு மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார் . நிகழ்வில் ஈரோடு வடக்கு மாவட்டக் கழக செயலாளர் என்.நல்லசிவம், கழக துணை பொதுச் செயலாளர் அந்தியூர் ப.செல்வராசு, மாநில நிர்வாகிகள் எஸ்எல்டி.ப.சச்சிதானந்தம், வி.சி. சந்திரகுமார், குறிஞ்சி என்.சிவகுமார் வீரமணி, மாவட்ட கழக நிர்வாகிகள் ஆ.செந்தில்குமார், செல்லப்பொன்னி, ப.க.பழனிசாமி, மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியன் ஒன்றிய கழக செயலாளர்கள் சு.குணசேகரன் கே.பி.சாமி தலைமை கழக பேச்சாளர் ஈரோடு இளையகோபால், கீதா கதிர்வேல், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் சரளை ராசு, மாநகர அமைப்பாளர் என்.ஶ்ரீதர் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



திருச்சி மாவட்டம் மணப்பாறையில் ஜனவரி 28 முதல் பிப்ரவரி 2 வரை நடைபெறவிருக்கும் பாரத சாரண – சாரணியர் இயக்க வைரவிழா மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நினைவு பெருந்திரளணி குறித்த விழிப்புணர்வு பேரணியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கொடியசைத்து தொடங்கி வைத்து, அதில் கலந்து கொண்டார். திருச்சி அண்ணா விளையாட்டு அரங்கில் தொடங்கி ரேஸ்கோர்ஸ் சாலை வழியாக டிவிஎஸ் டோல்கேட் கலைஞர் சிலையை அடைந்து மீண்டும் அண்ணா விளையாட்டு அரங்கு வரை என சுமார் 3 கிலோமீட்டர் தொலைவு பயணித்த இந்த பேரணியில் சுமார் 3 ஆயிரம் சாரண – சாரணியர் கலந்து கொண்டனர். திருச்சி மாவட்ட ஆட்சியர் பிரதீப்குமார் உள்ளிட்ட அரசு அலுவலர்களும் பங்கேற்றனர்.

### இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள

# 34 இந்திய மீனவர்கள் - மீன்பிடிப் படகுகளை விடுவித்திட விரைந்து நடவடிக்கை மேற்கொள்வீர்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்குக் கடிதம்!

**சென்னை, ஜன.28-**

**இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்கள் தனுஷ்கோடி அருகே 25.01.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவித்திட உடனடியாக தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (26.01.2025) கடிதம் எழுதியுள்ளார்.**

அக்கடிதத்தில் இலங்கைக் கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படும் மற்றொரு சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், 25.1.2025 அன்று ராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 3 மீன்பிடிப் படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற 34 மீனவர்களை (தமிழ்நாட்டைச் சேர்ந்த 32 மீனவர்கள் மற்றும் கேரளாவைச் சேர்ந்த 2 மீனவர்கள்) தனுஷ்கோடி அருகே அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர் என்று கவலைபடத் தெரிவித்துள்ளார்.

இலங்கை கடற்படையினரால் நமது மீனவர்கள் அடிக்கடி சிறைபிடிக்கப்படும் சம்பவங்கள், கடலோர மீனவ சமுதாயத்தினரிடையே பதட்டத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்துவதோடு அவர்களது எதிர்காலத்தை நிச்சயமற்றதாகவும், இருண்டதாகவும் ஆக்கியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

எனவே நமது மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவதைத் தடுக்க உறுதியான தூதரக நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்று முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, இலங்கைக் கடற்படையினரால் நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்கவும், கைது செய்யப்பட்ட அனைத்து மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்கவும் தூதரக வழிமுறைகள் மூலம் தேவையான அவசர நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முதலமைச்சர் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

### தமிழ்நாடு முழுவதும்

# பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் - 88 சதவீதம் நிறைவு!

## கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் தகவல்!

சென்னை, ஜன.28

முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டு துவக்கி வைக்கப்பட்ட பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 25.01.2025 வரை 88 சதவீதம் நிறைவுபெற்றுள்ளது என்று கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

“தமிழர்களின் பழம்பெரும் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் பிரதிபலிக்கும் விழாவாகப் பொங்கல் பண்டிகை தமிழ்நாட்டில் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. இந்நாள் அறுவடைத் திருவிழாவாகவும், இயற்கைக்கும், உழவர் பெருங்குடி மக்களுக்கும் அவர் தம்மோடு சேர்ந்து உழைத்த கால்நடைகளுக்கும், நன்றியையும் மகிழ்ச்சியையும் தெரிவிக்கும் விழாவாகவும் ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடப்படுகிறது.

2025-ஆம் ஆண்டு தைப் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடும் வகையில் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கும் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கும் தலா ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழுக்கரும்பு வழங்கப்படும்” எனவும், பொங்கல் திருநாளை முன்னிட்டு வழங்கப்படவுள்ள இலவச வேட்டி-சேலைகள் பொங்கல் பரிசுத் தொகுப்புடன் சேர்த்து வழங்கப்படும் எனவும் முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதன்படி, கடந்த 09.01.2025 அன்று சென்னை, திருவல்லிக்கேணி நகர கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் சின்னமலை வேளச்சேரி பிரதான சாலையில் இயங்கிவரும் சைதாப்பேட்டை - 11 நியாய விலைக் கடையில் முதலமைச்சர் அவர்கள் அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கி அந்தத் திட்டத்தினைத் துவக்கி வைத்தார்.

இதன் மூலம், தமிழ்நாடு முழுவதும் 34,793 நியாயவிலைக்கடைகளில் 2 கோடியே 20 லட்சத்து 94 ஆயிரத்து 585 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கும் பணி முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.

இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

அதன்படி, 25.01.2025 வரை தமிழ்நாடு முழுவதும் 1 கோடியே 94 லட்சத்து 15 ஆயிரத்து 346 அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்கள், இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினருக்கு பொங்கல் பரிசுத்தொகுப்பு வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

### இதய அறுவை சிகிச்சையில் உலக அளவில் அறியப்பட்ட

# டாக்டர் கே.எம். செரியன் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!



**சென்னை, ஜன.28**

**இதய அறுவை சிகிச்சையில் உலக அளவில் அறியப்பட்ட டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் மறைவிற்கு இரங்கல் தெரிவித்து முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-**

ஃப்ராண்டியர் லைஃப்லைன் மருத்துவமனையின் தலைவரும், இதய அறுவை சிகிச்சையில் உலக அளவில் அறியப்பட்டவருமான டாக்டர் கே.எம். செரியன் அவர்களின் மறைவுச் செய்தி அறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.

இதய சிகிச்சையில் அவரது முன்னோடியான பணிகள், எண்ணற்றோரின் உயிரைக் காப்பாற்றியுள்ளதுடன், மருத்துவத்துறையில் பலருக்கும் ஊக்கமாக அமைந்துள்ளது.

அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தார்க்கும் அவரது அன்புக்குரியார்க்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அவரது பங்களிப்புகள் மருத்துவத்துறையில் சிறப்பான பணிகளுக்குத் தொடர்ந்து தூண்டுகோலாக அமையும்.

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



திருப்பூர் மாவட்டம், குடிமங்கலம் ஒன்றியம் ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித்துறை சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்டம் 2024–25 நிதிலிலிருந்து ரூ.10.00 லட்சம் மதிப்பீட்டில் கொங்கல்நகரம் ஊராட்சியில் பயணிகள் நிழற்குடை அமைக்கும் பணியினை திருப்பூர் தெற்கு மாவட்டச் செயலாளர், மாநகராட்சி 4ம் மண்டலத்தலைவர் இல.பத்மநாபன் தலைமையில் ஒன்றிய கழக செயலாளர் அடிவள்ளி எம்.எஸ் முரளி முன்னிலையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி துவக்கி வைத்தார். இதில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் சி.சியாம் பிரசாத் உள்பட மாவட்ட, ஒன்றிய, கிளை கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும்

# நெல்லின் ஈரப்பத சதவிகிதத்தை உயர்த்திடுவீர்!

## ஒன்றியக் குழுவிடம் – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் வலியுறுத்தினார்!



கடலூர், ஜன.28-

கடலூர் மாவட்டம் வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பத சதவீதத்தை உயர்த்துவது குறித்து மத்திய குழுவினரிடம் வலியுறுத்தினார்.

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் (24.01.2025) அன்று கடலூர் மாவட்டம், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக விருந்தினர் மாளிகையில் மத்திய உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை அமைச்சகத்தின் உதவி இயக்குனர்கள் நவீன், திருமதி ப்ரீத்தி, தொழில்நுட்ப அலுவலர்கள் ராகுல், அபிஷேக் பாண்டே, FCI தரக்கட்டுப்பாடு மேலாளர் பாஸ்கர் குமார் ஆகியோர்களிடம் விவசாயிகளிட மிருந்து நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யும் நெல்லின் ஈரப்பதம் அளவை உயர்த்துவது குறித்து வலியுறுத்தினார். சந்திப்பின் போது, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக மேலாண்மை இயக்குனர் ஆ.அண்ணாதுரை, மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் ஆகியோர் உள்ளனர்.

சந்திப்பின் போது வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் தெரிவிக்கையில், கடலூர் மாவட்டத்தில் கடந்த 2024 ஆண்டு டிசம்பர் மாதத்தில் இயல்பாக கிடைக்க வேண்டிய மழை அளவை விட அதிகமழை பெய்துள்ளது. இது சராசரி மழை அளவைவிட 114 சதவீதம் அதிகம் ஆகும். மேலும், கடந்த 30 நாட்களாக வெப்பநிலை சுமார் 22 டிகிரி செல்சியஸ் முதல் 29 டிகிரி செல்சியஸ் என்ற அளவிலும், காற்றின் ஈரப்பதம் சுமார் 88 சதவீதம் முதல் 92 சதவீதம் என்ற அளவிலும், காலை வேலைகளில் மிகுந்த பனி மூட்டத்துடன் வானிலை நிலவி வருகிறது.

மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 17 சதவீதம் வரையிலான ஈரப்பதம் உள்ள நெல்லை கொள்முதல் செய்ய வேண்டும். காற்றின் ஈரப்பதம் அதிகமாக உள்ளதால் நிர்ணயிக்கப் பட்ட அளவான 17 சதவீத ஈரப்பதத்துடன் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு விவசாயிகளால் நெல் கொடுக்க இயலாத நிலை உள்ளது.

இதன் காரணமாக பல்வேறு விவசாய அமைப்புகள் மற்றும் விவசாயிகள் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் 22 சதவீதம் வரை ஈரப்பதம் உள்ள நெல்லினை கொள்முதல் செய்திட வேண்டும் என கோரிக்கை வைத்ததன் அடிப்படையில் விவசாயிகளின் வேண்டுகோளை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசிற்கு வலியுறுத்தியதன் பேரில் பல்வேறு மாவட்டங்களில் ஆய்வுப்பயணம் மேற்கொண்டு இன்றைய தினம் கடலூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் ஈரப்பதம் குறித்து ஆய்வு மேற்கொண்டனர்.

கனமழை காரணமாக விவசாயிகளுக்கு நடப்பு பருவத்தில் ஏற்பட்ட பாதிப்புகளால் அறுவடையின் போது விளைச்சல் குறைவாக உள்ளதாலும், காற்றின் ஈரப்பதம் அதிகரித்துள்ளதாலும் விவசாயிகளின் கோரிக்கையினை ஏற்று நெல் ஈரப்பதத்தின் அளவை 17 சதவீதத்திலிருந்து 22 சதவீதமாக உயர்த்தி தர மத்திய நிபனர் குழுவினரிடம் வலியுறுத்தப்பட்டுள்ளது என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

## திருச்சி தெற்கு மாவட்டத்தில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்க நாள் பொதுக்கூட்டம்!

திருச்சி, ஜன. 28-

திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக பாலக்கரை பகுதியில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் மொழிப்போர்த் தியாகிகள் வீர வணக்கம் நாள் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநகரக் கழகச் செயலாளர் மண்டல குழுதலைவர் மு.மதிவாணன் தலைமை தாங்கினார். பகுதி கழகச் செயலாளர் ராஜ்முஹம்மது வரவேற்புரை ஆற்றினார். கூட்டத்தில் கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைக் கழக பேச்சாளர் சென்னை அரங்கநாதன், மாநில அயலக அணி துணைச் செயலாளர் பரிதி இளம்சுருதி சிறப்புரை ஆற்றினர். கூட்டத்தில் மாவட்ட நிர்வாகிகள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, செந்தில், துணை மேயர் திவ்யா, மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




தி.மு.க. இளைஞர் அணி

கலைஞர் 100 1924 - 2023

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

கழகத் தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 1–இல், இரண்டு சட்டமன்றத் தொகுதிகளில் சமூக வலைத்தளப் பயிற்சி, கீழ்க்காணும் நாட்களில் நடைபெற இருக்கிறது. அதன் விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | மண்டலம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|---|
| 28.01.2025 செவ்வாய்க்கிழமை | மாலை 4.00 மணி | 1 | மயிலாப்பூர் | சமூக நலக்கூடம், கே.பி.தாசன் சாலை, தேனாம்பேட்டை, சென்னை. |

அந்தந்த சட்டமன்றத் தொகுதி பாகங்களில், இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள இளைஞர்கள் தவறாமல், இதில் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 25-01-2025

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி